**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 மும்மூர்த்தி ராஜா திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

| | | |
|---|---|---|
| 1. | அழகன் பெயரில் உள்ள பட்டா எண்.690 சான்றிட்ட நகல் | பி.சா.ஆ.14 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் லக்கன். எனது பாட்டனார் லக்கனுக்கு 4 பேர் வாரிசுகள். அவர்கள் அழகர் சாமி, கிருஷ்ணன், பழனியம்மாள், ரங்கசாமி. எனது பாட்டனார் லக்கனுடன் உடன்பிறந்தவர்கள் ராமன், ஆறுமுகம். எனது பாட்டன் லக்கனின் தகப்பனார் பெயர் அழகன். லக்கன் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. வாதி இதே நீதிமன்றத்தில் 1986ம் வருடம் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். பி.சா.ஆ.13 அந்த வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். மேற்படி வழக்கின் பிரதிவாதிகளாக உள்ளவர்கள் எனது பாட்டனார் சித்தப்பா என்றால் சரிதான்.

2) அ.வ.எண்.225/1986 வழக்கின் எனது குடும்பத்தினர் என்ன எதிர் வாதம் செய்தார்களோ அதே தான் நான் இந்த வழக்கில் எதிர்வாதமாக செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பைமாஷ் எண்.95, 145, 147 ஆகியவை தங்கள் குடும்பத்திற்கு மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் என வாதம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் மேற்படி பைமாஷ் எண்கள் எங்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் என் வசம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி நிலங்கள் எங்கள் குடும்பத்திற்கு இனாமாக வழங்கப்பட்ட மானிய நிலம் என்றால் சரிதான்.

3) இவ்வழக்கின் வாதிகள் பைமாஷ் எண்.240ஐ ஏலத்தில் எடுத்ததாக கூறியுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் பைமாஷ் எண்.240க்கான புல எண் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி புல எண் எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்லி இருக்கிறேன் என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் சொல்கிறேன். இவ்வழக்கில் வருவாய்த்துறையினர் மூலமாக பைமாஷ் எண்ணிற்கு இணையான புல எண்கள்

குறித்து தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

4) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அறிக்கையில் பைமாஷ் எண்.95, 145, 147, 240 ஆகியவற்றிற்கு இணையான சர்வே எண்கள்.220, 528, 529/1, 230/2 என கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் தான் வாதி தாக்கல் செய்துள்ள பைமாஷ் எண்.240க்கு புல எண்.230/2 என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பைமாஷ் எண்.95, 145, 147 ஆகியவற்றின் இணையான புல எண்கள் 220, 528, 529/1 என அறிக்கை கொடுத்துள்ளது சரியா தவறா என்றால் தவறு ஆகும்.

5) பைமாஷ் எண்.95, 145, 147 ஆகியவற்றிற்கு இணையான புல எண்.598 என்பதற்கான ஆவணங்களை ஒப்படைத்து இருக்கிறேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். எங்கள் குடும்பத்திற்கு மானியமாக கொடுக்கப்பட்ட இடம் வேறு, தாவா சொத்து வேறு என்றால் சரியல்ல. எங்களுக்கு மானியமாக கொடுத்த இடம் தாவா சொத்தாக இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை ஒப்படைத்து இருப்பேன் என்றும் தாவா சொத்து வேறு இடம் என்பதால் தான் ஆவணங்களை ஒப்படைக்க இயலவில்லை என்றால் சரியல்ல. பைமாஷ் எண்களை ஒப்புமை படுத்தக்கூடிய ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே இல்லை என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல.

6) வருவாய்த்துறையில் கொடுத்த அறிக்கையில் வாதியை பொறுத்து விரோதமாக மாற்றி கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பைமாஷ் எண்கள் எந்த ஆண்டு புல எண்களாக மாற்றப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. 1964ம் வருடம் புல எண்கள் குறித்து ஏற்பட்ட செட்டில்மெண்ட் பதிவேடு பற்றி தெரியுமா என்றால் தெரியும். செட்டில்மெண்ட் பதிவேட்டில் மானிய நிலங்கள் தனியாகவும், ரயத்துவாரி நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் தனியாகவும் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியுமா என்றால் தெரியாது.

7) 1964க்கு பின்னிட்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய கணக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கீழப்பகுதி கிராமத்தில் மானியமாக கொடுக்கப்பட்ட நிலங்களின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் 1986ல் அ.வ.எண்.225/1986 வழக்கு தாக்கல் செய்த பின்னிட்ட ஆவணங்களை தான் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, முன்பு

**உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**